

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதியில் கலைஞரின் கனவு இல்ல திட்டம் வழங்கும் நிகழ்ச்சி, வாணாபுரம் பகண்டை கூட்டு ரோடு சட்டமன்ற அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது, இதில் சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்துகொண்டு 7 ஊராட்சிகளைச் சேர்ந்த 110 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 85 லட்சம் மதிப்பில் கலைஞர் கனவு இல்லத்தின் கீழ் வீடு கட்ட பணி ஆணையை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் கிழக்கு ஒன்றியம், நாவம்மால் காப்பேர் ஊராட்சியில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான *டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஆர்.எஸ்.வாசன், வே.கணேசன், கு.செல்வமணி, வி.ஜி.பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூருக்கான

# பசுமை ரயில் பாதை, பிராந்திய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்!

## திருச்சி ஆலோசனைக் கூட்டத்தில் அருண்நேரு எம்.பி. பேச்சு!

திருச்சி, ஏப். 29 -

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள ரயில்வே பல்துறை மண்டல பயிற்சி மையத்தில் , திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற வருடாந்திர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது .

கூட்டத்தில் பங்கேற்ற ரயில்வே பொது மேலாளர் ஆர்.எம். சிங் , கோட்ட ரயில்வே பொது மேலாளர் எம்.எஸ். அன்பழகன் மற்றும் துறை அதிகாரிகளிடம் பயணிகளின் தேவைகள் பற்றியும், தொகுதியில் தேவையான ரயில்வே மேம்பாட்டு பணிகள் பற்றியும் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, பங்கேற்று கோரிக்கைகளை எழுப்பினார்.

அப்போது அருண் நேரு எம்.பி. பேசியதாவது:

தமிழ்நாட்டின் பெரம்பலூருக்கு முன்மொழியப்பட்ட கிரீன்ஃபீல்ட் ரயில் பாதை, இந்தப் பகுதிக்கு குறிப்பிடத்தக்க பொருளாதார நன்மைகளைத் திறக்கும் திறன் கொண்ட ஒரு திட்டமாகும்.

விவசாய உற்பத்தியில் வளமான மாவட்டமான



பெரம்பலூர், மக்காச்சோளம், பருத்தி மற்றும் தினை போன்ற முக்கிய பயிர்களை வளர்க்கிறது, இவை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கணிசமான சந்தை தேவையைக் கொண்டுள்ளன. போக்குவரத்து உள்கட்டமைப்பை மேம்படுத்துவது விநியோகச் சங்கிலிகளை ஒழுங்குபடுத்தும், போக்குவரத்து செலவுகளைக் குறைக்கும், மேலும் விளைபொருட்களை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்யும், இதன் மூலம் உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் மற்றும் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும்.

கூடுதலாக, பெரம்பலூர் ஸ்டார்ச், உணவுப் பொருட்கள் மற்றும் காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இரண்டு முக்கிய தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது, இவை உலக சந்தைகளில் நிலையான தேவையைக் கொண்டுள்ளன.

தற்போது, இந்த தொழிற்சாலைகள் தினமும் சுமார் 75 கொள்கலன்களை ஏற்றுமதி செய்கின்றன. மேலும் ஒரு பிரத்யேக ரயில் பாதையை நிறுவுவது இந்த செயல்பாடுகளின் செயல்திறன் மற்றும் செலவுசெயல்திறனை மேம்படுத்தும், மேலும் அவற்றின் போட்டித்தன்மையை மேலும் வலுப்படுத்தும்.

மேலும், பெரம்பலூர் தானிய சேமிப்பு மற்றும் விநியோகத்திற்கான முக்கிய மையமாக செயல்படுகிறது, தானிய வேகன்கள் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் வருகின்றன. முன்மொழியப்பட்ட ரயில் பாதை, தளவாடங்களை மேம்படுத்தி, தானியங்களின் சீரான மற்றும் சரியான நேரத்தில் இயக்கத்தை உறுதிசெய்து, உணவுப் பாதுகாப்பை ஆதரிக்கும், பெரம்பலூருக்கான பசுமை ரயில் பாதை, பிராந்திய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும், கிராமப்புற இணைப்பை ஊக்குவிக்கும் மற்றும் தொழில்துறை வளர்ச்சியை வலுப்படுத்தும். இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டத்தின் முழு திறனையும் ஆராய சாத்தியக்கூறு ஆய்வுகள் தொடங்கப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகள் பொதுமக்களின் அவசரக் தேவைகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றன, மேலும், அவை தீர்க்கப்பட்டவுடன், இந்த தொகுதிகளில் உள்ள ரயில் பயனர்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பாதுகாப்பை கணிசமாக மேம்படுத்தும்.

உங்கள் அன்பான கவனத்தையும்,விரைவில் நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அருண்நேரு எம்.பி பேசினார்.

மேலும், லால்குடி மணச்சநல்லூர் முசிறி துறையூர் பெரம்பலூர் குளித்தலை உட்பட்ட பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் வாரியாக உள்ள ரயில்வே மேம்பாட்டு திட்டங்கள் குறித்தும் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

### மருதமலையில் உலகின் மிகப்பெரிய முருகன் சிலை!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு!

## தருமையாதீனம் அறிக்கை!

மயிலாடுதுறை, ஏப்.29-

மருதமலையில் உலகின் மிகப்பெரிய முருகன் சிலை நிறுவப்படும் என்று அறிவித்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தருமையாதீனம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

உலகம் உவப்ப வளன் ஏற்பு திரிதரு

பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டா அங்கு

ஓஅற இமைக்கும் சேண் விளங்கும் அவிர் ஒளி

திருமுருகாற்றுப்படை

இந்தியத் திருநாட்டில் ஆன்மிக பூமியாக விளங்குவது தமிழ்நாடு. இங்கு முருக வழிபாடு மிகத் தொன்மையானது. சிவனின் மகனான முருகனுக்கும் தமிழர்களுக்கும்இருக்கக்கூடிய தொடர்பு வரலாற்று காலத்திற்குக் முற்பட்டதாகும். தமிழர்களின் பண்பாட்டோடும் மொழியோடும் தத்துவத்தோடும் பழக்க வழங்கங்களோடும் முருக வழிபாடு பின்னி பிணைந்திருப்பதை சங்ககால இலக்கியங்கலான திருமுரு காற்றுப்படை, பரிபாடல் மிகச் சிறப்பாகக்



கூறுகின்றன.

மலேசியா நாட்டில் உலகில் மிகப் பெரிய பத்துமலைக் குகை முருகன் சிலையின் உயரம் 140 அடி கொண்டது. தமிழ்க்கடவுளான முருகனுக்கு அயல்நாடுகளிலும் ஆலயம் எழுப்பி பெருமை சேர்த்துள்ளனர் தமிழ்நாட்டு சிற்பிகள்.

**ஆறுபடை வீடுகள்!**

முதல்படை வீடான திருப்பரங்குன்றத்தில் சூரபதுமனைப் போரில் வென்ற முருகனுக்கு தெய்வானையை மணமுடித்து வைக்கின்றார்கள். முருகன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். இரண்டாம் படைவீடானதிருச்செந்தூர் சூரபதுமனை அழித்ததாக கந்தபுராணம் கூறுகின்றது. குரு தலமாக விளங்குகிறது. மூன்றாம் படைவீடான பழநி சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியாகும். முருகனின் தோற்றம் உலக உண்மைகளை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

நான்காம் படை வீடான சுவாமிமலையில் தன் பிள்ளையின் வாயால் பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்க பிள்ளையை குருவாக ஏற்று தான் சீடனாக அமர்ந்து குருவின் விளக்கத்தைகேட்ட இடமாகும். ஐந்தாம் படைவீடான திருத்தணி வேடர் குலத்தில் பிறந்த வள்ளியை திருமணம் செய்துகொண்ட இடமாகும் ஆறாம் படைவீடான பழமுதிர் சோலை முருகன் சிறுவனாக வந்து ஔவையாரை சோதித்த இடமாகும். எனவே முருகப்பெருமா னுக்கு முகங்கள் ஆறு, படைவீடுகள் ஆறு, வளர்த்த கார்த்திகைப் பெண்கள் ஆறு, முருகனின் மந்திரம் ஆறு ஆகியவை முருகனின் சிறப்புகளாக சொல்லப்படுகின்றன.

மருதமலை முருகன் கோயில் ஏழாம்படை வீடாகக் கருதப்படுகிறது. இக்கோயில் 1200 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. கொங்கு வேட்டுவக் கவுண்டர் மன்னர்களால் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மருதமலை கடல் மட்டத்திலிருந்து சுமார் 741 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது. 873 படிகள் ஏறி முருகன் சந்நிதியை அடையலாம்.

**184 அடி உயர முருகன் சிலை!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே சேகர்பாபு அவர்கள் தமிழக சட்டசபையில் அறிவித்தபடி, உலக கதிலேயே உயரமான 184 அடி உயரமுள்ள முருகன் சிலை மருதமலை அடிவாரத்தில் நிறுவப்பட உள்ளது. இதற்கான பீடம் மட்டும் 38 அடி உயரம் கொண்டது. நட்சத்திர அமைப்பின் மையத்தில் இச்சிலை அமையும். நட்சத்திரக் குறியீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் முருகனின் அறுபடை வீடுகள் ஒவ்வொன்றாக அமையும்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுக்கு பாராட்டு!**

தமிழ்க்கடவுளுக்கு வரலாற்று சிறப்புமிக்க இச்சிலையை ரூ.110/- கோடி மதிப்பில் நிறுவ ஆணையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களும் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் இக்கோயிலின் அறங்காவலர்க் குழுத் தலைவர் ச.ஜெயக்குமார் அவர்களும் அறங்காவலர்க் குழு உறுப்பினர்களும் பாராட்டுக்குரியவர்கள். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் எல்லா நலமும் வளமும் கிடைக்க ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### என்.எல்.சி. நிறுவனத்தில் தொழிற்சங்கங்களுக்கான

# அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச. முதன்மைச் சங்கமாக வெற்றி!

## சட்டப் பேரவையில் நெய்வேலி தொகுதி சபா.இராசேந்திரன் பேச்சு!

சென்னை, ஏப். 29 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நெய்வேலி தொகுதி உறுப்பினர் சபா.இராசேந்திரன், என்.எல்.சி. நிறுவனத்தின் தொழிற்சங்கங்களுக்கான அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச. முதன்மை சங்கமாக வெற்றி பெற்றுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-

**சபா. இராசேந்திரன்:**

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன்:**

கடலூர் மாவட்டம், மேலிருப்பு ஊராட்சி, பெரியகாட்டுப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மேலிருப்பு முழுநேர நியாய விலைக் கடை தற்போது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

**சபா. இராசேந்திரன்:** புதிய கட்டடம் கட்டப்படவில்லை என்று சொன்னாலும், பழைய கட்டடத்தை சீரமைத்துக் கொடுத்திருக்கிற நமது கழக அரசுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நேற்று நடைபெற்று முடிந்திருக்கிற NLC நிறுவனத்தில் தொழிற்சங்கங்களுக்கான அங்கீகாரத் தேர்தலில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் முதன்மைச் சங்கமாக வெற்றி பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாபெரும் வெற்றிக்கு வழிகாட்டியாக இருந்த முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) துணை முதல்வர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்ட அமைச்சர்கள் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் சி.வி.கணேசன் அவர்களுக்கும், கூட்டணி தோழமைக் கட்சியினுடைய தலைவர்களுக்கும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையினுடைய செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நான் முதல்வன் திட்டத்தில் படித்த மாணவர்கள் வெற்றி!

அதேபோல எனது நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் உள்ள சிலந்திநாதன் பேட்டை ஊராட்சியில் I.A.S., தேர்வில் இரண்டு பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதிலே சரண்யா சரவணன் என்பவர் 125வது இடத்திலும், ராஜபிரபு என்ற மாணவர் 744வது இடத்திலும் பெற்று, வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதிலே சிறப்பு என்வென்று சொன்னால் இந்த இரண்டு மாணவர்களும் முதல்வர்



அவர்களுடைய பெருமை மிகு திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் அவர்களை சென்று வாழ்த்திவிட்டு வருகின்றபோது அந்த இரண்டு மாணவர்கள் இருவரும் முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க சொல்லி சொல்லியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அன்பழகன் அவர்கள் நேற்று பேசும் போது நூறு ஆண்டு வாழ்க என்று வாழ்த்தியிருக்கிறார்கள். அந்த மாணவர்கள் அதையும் தாண்டி, முதல்வர் அவர்கள் நூறு ஆண்டுகளுக்கு மேலாக வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறார்கள், நன்றித் தெரிவிக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த subjectக்கு வருகின்றபோது அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே இரண்டு பகுதிக்கு, பகுதிநேரக் கடைகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விசூர் ஊராட்சியில் மணலூர் காலனி என்பது 5 கிலோ மீட்டர் தூரம் சென்று ரெட்டிப்பாளையம் கடையில் இருந்து அவர்கள் பொருள்கள் வாங்கவேண்டியது இருக்கிறது. அதில் 120 card தான் இருக்கிறது என்றாலும் சிறப்பு நேர்வாக கருதி அந்தப் பகுதி நேர நியாயவிலைக் கடையை அமைத்துத்தர வேண்டும். அதேபோல கீழ் மாம்பட்டு ஊராட்சியில் முத்தரசன் குப்பம் பகுதியில் 968 card உள்ள அந்த பகுதியில் ஒரு முழுநேர நியாய விலைக்கடை அமைத்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை, தங்கள் வாயிலாக கேட்டு அமருகிறேன்.

**அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்:** உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே புதிய கட்டடம் வேண்டுமென்று கேள்வியை எழுப்பியிருந்தார். அவருடைய அந்தக் கேள்வி இங்கே வருவதற்கு முன்னதாகவே, அந்தக் கடை பழுது நீக்கப்பட்டு, இப்போது அது புது பொலிவோடு இருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது பகுதிநேர கடை இரண்டு வேண்டுமென்று கேட்டிருக்கிறார், குறிப்பாக அந்தக் கடைகளை நாம் பிரிக்கின்ற நேரத்தில் சில விதி முறைகள் அங்கே இருக்கிறது. அது ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது அந்த விதிகளையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. திருவாமூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இரண்டு கடைகள் ஏற்கெனவே இருக்கிறது. அதில் விசூர் முழுநேரக்கடை, அதில் ஏற்கெனவே 640 குடும்ப அட்டைகள் உள்ளன. அதில் இருந்து இரண்டு பகுதிநேர கடைகள் ரெட்டிப்பாளையம், நன்னிக்குப்பம் என இரண்டுகள் 474, 210 ஆகிய எண்ணிக்கையில் குடும்ப அட்டைகள் இருக்கிறது. ரெட்டிப்பாளையம் பகுதி நேரக் கடையில் இருந்து மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு சொல்லியிருக்கின்ற மணலூர் காலனியில் கடையில் 94 cardதான் இருக்கிறது. ஆனால் தூரத்தைப் பொறுத்தவரை 5 கிலோமீட்டர் தொலைவு இருக்கின்ற காரணத்தாலே சிறப்பு நிகழ்வாக எடுத்துக்கொண்டு, எதிர்காலத்தில் அதை செய்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**சபா. இராசேந்திரன்:** கடைகளைப் பிரித்து தருகிறேன் என்று அறிவித்து இருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிற சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்துகிற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை கேட்டு அமருகிறேன்.


**அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்:** சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரை நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் உரிய விடையை தனி கேள்விக்கு பதில் அளிப்பார்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. அரங்கண்ணல்

ஏப்ரல் 29 (1999)



பள்ளிநாட்கள் தொட்டு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உற்ற தோழராக திகழ்ந்தவர். கலைஞர் அவர்களால் பொதுவாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்.

தந்தை பெரியாரின் 'குடி அரசு' பத்திரிகையில் பணியாற்றினார். பின்னர், 'அறப்போர்' என்ற பெயரில் வார இதழ் நடத்தினார். இதையடுத்து அண்ணாவின் 'திராவிட நாடு' பத்திரிகையில் பணியாற்றினார்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டும், கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் தலைவராகவும் சிறப்புற பணியாற்றினார்.

கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு, தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.